**பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம் - 2021**

பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பேராதனிய - பதுளை - செங்கலடி வீதியின் பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான வீதியின் 147 கிலோமீற்றர்களை புனரமைப்பதன் மூலம் பிராந்தியத்தில் போக்குவரத்தை முன்னேற்றுவதற்குப் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும் ஏற்ற வகையில் ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் இணைப்பை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 140 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி யூஎஸ்.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 12 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஜுன் 30 ஆந் திகதி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 08 இற்கு முரணாக செயற்திட்டமானது 2021 ஆம் ஆண்டிற்காக சிவில் வேலைகள் மீதான 03 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிற்காக ரூபா 189.37 மில்லியன் தொகையான ஏற்பாட்டினை செய்திருக்கவில்லை. | கணக்குகளை முடிவுறுத்தும் போது முறையான தகவல்கள் இல்லாமல் இவ் இரண்டு பட்டியல்களிற்காகவும் ஓர் ஏற்பாட்டினை செய்வதற்கு ஓர் மதிப்பீட்டினை வரைவதற்கு சாத்தியமற்றதாக இருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்று மற்றும் பொதுத்திறைசேரியினால் பராமரிக்கப்பட்ட பதிவுகள் என்பனவற்றின் பிரகாரம் ரூபா 2,536.57 மில்லியன் தொகையான எஸ்எப்டி கடனின் மொத்த கிடைத்த தொகைகளும் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும் தொடர்புடைய தொகை வெளிவளங்கள் திணைக்களத்தின் பதிவுகளில் ரூபா 1,425.65 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. மேலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒபீட் கடனின் கிடைப்பனவுகளிலிருந்தான மொத்த செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,334.8 மில்லியனாகும். இருப்பினும் தொடர்புடைய தொகை வெளிவளங்கள் திணைக்களம் மற்றும் பொதுத்திறைசேரியின் பதிவுகளில் முறையே ரூபா 1,282.38 மில்லியன் மற்றும் ரூபா 1,282.47 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. | இவ் ஆர்எப்ஏ தொகைகள் டிஓடி இனால் செலவினமாக பதியப்படவில்லை. | கணக்கிணக்கங்கள் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| ஒபீட் பிரிவிலுள்ள பொதி 03 இன் கீழான ஒப்பந்ததாரர் 2021 ஜூலை 12 இல் வேலைகளை நிறுத்தியிருந்தார். வேலைகளின் இடைந்நிறுத்தல்களின் போது 60.32 சதவீத பௌதீக செயலாற்றல் மற்றும் 55.03 சதவீத நிதிச்செயலாற்றல் அடையப்பட்டிருந்தன. 2022 ஜூலை 10 இலான கணக்காய்வு திகதியில் உள்ளவாறு ஒப்பந்ததாரர் வேலைகளை | ஒப்பந்த முடிவுறுத்தலிற்கான செயன்முறை நியமிக்கப்பட்ட குழுவுடன் நடைபெறுகின்றது. | மிகுதி வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கைவிட்டதிலிருந்து அண்ணளவாக ஒரு வருடம் கடந்திருந்தும் வேலை வழங்குனர் ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 15.2 இன் பிரகாரம் ஒப்பந்தத்தினை கைவிட்டிருக்கவில்லை. மேலும் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் கூட 2022 ஜூலை 31 இல் காலாவதியாகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |

**3.2 காணி சவீகரிப்பு செயன்முறையின் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 1.06 மில்லியன் ஊக்குவிப்புக்கள் காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | கோவிட் பிரச்சினை மற்றும் எரிபொருள் பிரச்சினை கூட செயலாற்றலை பாதித்திருந்தது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வேலைகளின் பகுதியளவிற்கான கையேற்பு பத்திரங்கள் ஒபீட் பிரிவில் 02 ஒப்பந்தப்பொதிக்காக 03 இடங்களில் வழங்கப்பட்டிருந்ததுடன் அண்மைய குறைபாட்டு நிபர்த்திக்காலம் 2022 திசெம்பர் 03 இல் முடிவடைகின்றது. ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கடின பட்டியல் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் அனைத்து வேலைகளும் 2022 மார்ச் 28 அளவில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். இருப்பினும் கணிசமான அளவு எண்ணிக்கையான நிலுவை வேலைகள் மற்றும் குறைபாடுகள் 2022 மே 26 வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | கடன் வழங்குனர் கடைசி சனவரியிலிருந்து ஒப்பந்ததாரரின் கொடுப்பனவினை மீளப்பெற்றிறாததுடன் ஒப்பந்ததாரரிற்கு காசுப்பாய்ச்சல் பிரச்சினையை ஏற்படுத்தலாம். மேலும் கடின பட்டியலின் பூர்த்தியாக்களை கூட தாமதிக்கலாம். இருப்பினும் அது 2022 திசெம்பர் 03 அளவில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கும். | மிகுதி நிலுவை வேலைகள் மற்றும் குறைபாடுகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் பெறுகை குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில், மொத்த ஒப்பந்த கூட்டுமொத்தம் ரூபா 2,919.56 மில்லியனில் ஒபீட் பிரிவின் ஒப்பந்தப்பொதி 03 இன் மிகுதி வேலைக்கான ஒப்பந்தங்களை கையளிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த விலையுடன் ஒப்பிடும் போது 107 சதவீத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 2,154.37 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஓர் மேலதிக கிரயம் மந்தகதியான செயலாற்றல், பாரிய தாமதங்கள் மற்றும் விரைவான நேரத்தில் நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் போன்றன காரணமாக அரசாங்கத்தினால் சுமக்க வேண்டி வரும் என்பது அவதானிக்கப்பட்டது. | தற்போது நிலவுகின்ற விகிதத்தின் பிரகாரம் மிகுதி வேலைக்கான கிரய மதிப்பீடு உண்மையான மதிப்பீட்டுடன் மிகவும் அதிகமாக இருந்தது. | மிகுதி வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒபீட் பிரிவிலுள்ள பிரிவு 03 இன் கீழாக ஒப்பந்ததாரரிடமிருந்து பெறவேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பண நிலுவை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 208.67 மில்லியன் தொகையாக இருந்ததுடன் 2022 ஜூலை 10 இலான கணக்காய்வு திகதியில் உள்ளவாறு கூட மீளப்பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் முற்பண கொடுப்பனவு உத்தரவு பத்திரம் 2022 ஏப்ரல் 25 இல் காலாவதியாகியிருந்தது. | பொறியியலாளரினால் வழங்கப்பட்ட இறுதிப்பத்திரத்தின் பிரகாரம் அது முழுமையாக மீளப்பெறப்பட்டுள்ளது. | முற்பணங்களை உடனடியாக மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் ஒபீட் பிரிவின் கீழ், அஸ்பால்ட் விபரக்குறிப்பினை அடையமுடியாதிருந்த 34 உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகளில் 04 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒபீட் பிரிவின்பொதிகள் 02 மற்றும் 03 இன் கீழ் 806 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 366 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பொதி 02 இன் கீழான பொதுமக்கள் முறைப்பாடுகள் அவர்களது குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதியான 2022 திசெம்பர் 04 இற்கு முன்னர் தீர்க்கப்படும். ஒப்பந்ததாரரின் அபாயத்துடன் தொடர்புபட்ட முறைப்பாடுகள் பொதி 03 இற்காக ஏற்கனவே வகைப்படுத்தப்பட்டுள்ளது. | அஸ்பால்ட் தோல்வியுரல் பிரிவுகளை சரி செய்யவும் பொதுமக்கள் முறைப்பாடுகளை உடனடியாக தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உபபிரிவு 14.6 இன் பிரகாரம் ஓர் இடைக்கால கொடுப்பனவு பத்திரத்திற்காக உறுதிப்படுத்தப்பட்ட வேலை ஒப்பந்தப் பெறுமதியில் 2 சதவீதத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். இருப்பினும் இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை மதிப்பாய்வு செய்யும் போது குறித்த தேவைப்பாட்டிற்கு கீழான 30 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டன. | இக்கொடுப்பனவுகள் ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலினை மேம்படுத்தவும் செயற்திட்ட நன்மைக்காகவும் செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட விடையங்களுடன் இணங்கி ஒழுக வேண்டும். |
| (ஊ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெறுவதற்கான ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 84.15 மில்லியன் ஒப்பந்ததாரினால் பெறப்பட்ட செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெறுவதற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2021 திசெம்பர் 31 வரை கூட அத்தொகையினை ஒப்பந்ததாரர்களிடமிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால ஒப்பந்தங்களிலிருந்து இவ்உருப்படியை தவிர்க்க நாங்கள் ஓர் தீர்மானம் எடுத்துள்ளோம். | ஏல ஆவணங்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |